செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 358 நாள்: 19-6-17

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு சார்ந்த மாநில முன்னனி நிதி நிறுவனமாகிய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், 19.06.2017 முதல் 23.06.2017 வரை நடத்தும் சிறப்பு கடன் விழாவில், 23.06.2017 அன்று வேலூர் ஆபீசர்ஸ் லைனில் அமைந்துள்ள ஏலகிரி அரங்கத்தில் நடைபெறும் சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் உயர்திரு. **S.A**. ராமன், **IAS** அவர்கள் காலை 10.00 மணிக்கு கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

மாநில முன்னனி நிதி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், 1949 - ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி /சேவை தொழிற்சார் நிறுவனங்களுக்கு, புதிய தொழில் தொடங்க, தொழில் விரிவாக்கம் செய்ய காலக்கடன், நடைமுறை மூலதனக் கடன் ஆகிய நிதி உதவிகளை வழங்கி வருகிறது.

உற்பத்தி நிறுவனங்கள்/ உணவகம்/ விடுதிகள்/ மருத்துவமனைகள் / மருந்து ஆய்வுக்கூடம் / வாகனங்கள்/ புதிய தொழில் முனைவோர் ஆகியோர்களின் காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக் கடன் (Working Capital Term Loan) போன்ற பற்பல திட்டங்கள் வழங்கப்பட உள்ளன.

இக்கழகம் தமிழக அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டம் (**Needs**) மூலம் கடன் வழங்கி வருகிறது. மேலும் இக்கழகம் அரசு மானியங்களை பெறுவதற்காக முகவர்களாக செயல்பட்டு வருகிறது.

ஏற்கனவே தொடங்கி சிறப்பாக இயங்கும் தொழிற் நிறுவனங்கள், புதிய தொழில் முனைவோர் ஆகியோர்களின் கடன் தேவைகளுக்கு பற்பல கடன் திட்டங்கள், கடன் நடைமுறை விதிகள் பற்றி தொழிற் முனைவோருக்கு சிறப்பு ஆலோசனைகள் வழங்க இச்சிறப்பு கடன் விழா நடத்தப்படுகிறது.

23.06.2017 அன்று மேலும் மண்டல மேலாளர் திரு. **R**. சீனிவாசன் மற்றும் முதுநிலை மேலாளர் திரு. **M**. இரங்கராஜீ கலந்து கொண்டு சிறப்பு ஆலோசனைகள் வழங்க உள்ளனர். தொழில் முனைவோர்கள் மேற்படி கடன் விழாவில் பங்கு பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

[redacted]
19/6/17

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

[redacted]

செ.ம.தொ.அ.
வேலூர் 19/6/17

Malа
SBM (TIIC Ltd)
Vellore
0416-2249861 (office)

[redacted]